இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஆசை அல்லது விருப்பம் என்பது உண்டு. வேதம் சொல்லுகிறது...

- நீதி 13:19 – வாஞ்சை நிறைவேறுதல் ஆத்துமாவுக்கு இனிது.

ஆசைக்கும் ஒரு அளவு உண்டு! அளவிற்கு அதிகமாக ஆசைப்படுவதினால் ஏற்படும் விளைவுகள் நமக்கு நன்றாகவே தெரியும்.

- சங் 112:10 - துன்மார்க்கனுடைய ஆசை அழியும்.

  சங் 145:19 - தேவன் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்கிறார்.

ஏரோதின் ஆசை (லூக் 23:8,9)

ஏரோது இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு, அநேக காரியங்களைக்குறித்து அவரிடத்தில் வினாவினான். அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

சகேயுவின் ஆசை (லூக் 19:3)

இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். வச. 5. இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டம் என்றார்.

## நீதிமானுக்கு இருக்க வேண்டிய வாஞ்சைகள்

### 1. தேவாலயத்தின்மீது வாஞ்சை

- சங் 63:1,2 - சங்கீதக்காரனாகிய தாவீது: என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன் என்கிறான். (மாம்சம் ஆலயத்தை வாஞ்சிக்கிறது)
- சங் 84:2,10 – கோராகின் புத்திரர்: என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது என்கிறதை காணமுடிகிறது. (ஆத்துமா ஆலயத்தை வாஞ்சிக்கிறது)
- 1 நாளா 29:3 - தாவீது சொல்லுகிறான்: இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்.
- யோவான் 2: 15-17 - இயேசுவுக்கு தேவாலயத்தின்மீது இருந்த வாஞ்சை.

தேவாலயம் பாழாகிறதைப் பார்த்தவர்: கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டுபண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டு, புறாவிற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார். காரணம் தேவாலயத்தை குறித்த உண்டான பக்திவைராக்கியம் ஆகும்.

- லூக் 22:15 - இயேசுவுக்கு பஸ்காவை புசிப்பதற்க்கான வாஞ்சை.

நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்.

## 2. தேவவசனத்தின்மீது வாஞ்சை

1. சங் 119:131 – உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால், என் வாயை ஆவென்றுதிறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன்.

- சங்கீதக்காரனுக்கு வசனத்தின்மீதிருந்த வாஞ்சை.
  - ➢ உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்குமுன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும் (சங்கீதம் 119:148).
  - ➢ அவர்கள் இருதயம் நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது; நானோ, உம்முடைய வேதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன் (சங்கீதம் 119:70).
  - ➢ ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன் (சங்கீதம் 119:127).
- தூக்கம், உணவு, பொருள் இவைகளைவிட அதிக முக்கியத்துவம் தரவேண்டும்.

2. நெகே 8:1,5,9;8:13;9:3 - நெகேமியா காலத்தில் எழுப்புதல் ஏற்பட்டதற்கு காரணம் வேதவசனமே!

- வச. 1 மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொண்டுவந்தார்கள்.
  - ➢ வச. 5 எஸ்றா சகல ஜனங்களுக்கும் உயர நின்று, சகல ஜனங்களும் காணப் புஸ்தகத்தைத் திறந்தான்; அவன் அதைத்திறந்தபோது, ஜனங்கள் எல்லாரும் எழுந்துநின்றார்கள்.
  - ➢ வச. 9 ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, அழுதார்கள். காரணம் பாவத்தை உணர்ந்தார்கள்.
  - ➢ வச. 13 - மறுநாளில் ஜனத்தின் சகல வம்சத்தலைவரும், ஆசாரியரும், லேவியரும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவேண்டும் என்று வேதபாரகனாகிய எஸ்றாவினிடத்தில் கூடிவந்தார்கள்.

3. மாற்கு 8:2 - ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்.
   - ➢ ஆண்டவரை தேடிவந்த ஜனங்களுக்கு வேதவசனத்தின்மீது இருந்த வாஞ்சை. (சாப்பிடாமல்கூட வசனத்தை கேட்கின்றனர்)

4. அப் 17:11 - பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.

- 1 பேதுரு 2:3 - நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.
- மார்த்தாளைப்போல BUSY என்று சொல்லாமல்,மரியாளைப்போல தேவனின் பாதத்தில் அமர்வோம். ஞானப்பாலாகிய வேதவசனத்தின்மீது வாஞ்சையாய் இருப்போம்.

## 3. சகோதரர்களை குறித்த வாஞ்சை

- 1 தெச 2:17 - சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்சக்காலம் உங்களைவிட்டுப் பிரிந்திருந்தபடியினாலே, உங்கள் முகத்தைப் பார்க்கவேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம்பண்ணினோம்.
- 1 தெச 2:8 - நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்.
    - இங்கே சகோதரர்களை பார்க்கவும், ஜீவனை தரவும் வாஞ்சையாய் இருப்பதாக பவுல் கூறுகிறார்.
- பிலி 1:8 - இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்குத் தேவனே எனக்குச் சாட்சி.
    - அன்பினாலே ஒருவருக்கொருவர் வாஞ்சையாய் இருக்கனும்.

<u>சகோதரஅன்பு</u>

1. மன்னிக்கும் (கொலோ 3:13) ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (யோசேப்பு)
2. விட்டுக்கொடுக்கும் (ஆதி 13:8,9) - ஆபிரகாம்
3. பிரிவை தாங்காது (அப் 20:36-38) மிலேத்துவை விட்டு பவுல் என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்கமாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, அவர்களெல்லாரும் மிகவும் அழுது,பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போய் வழிவிட்டனுப்பினார்கள்.
4. ஜெபிக்கும் (பிலி 1:11) நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்பரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல்செய்கிறேன்.

    - ❖ இப்படிப்பட்ட குணம் நம்மிடம் உண்டா?

## 4. <u>பரலோகத்தின் வாஞ்சை</u>

- 2 கொரி 5:2,8 - இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்; வச. 8 - இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். <u>ஏனெனில், நம்முடைய குடியிருப்பு அதுவே!</u>
- பிலி 3:20 - நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.
- எபி 11:16 - பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் அனைவரும் விசுவாசத்தினாலே இந்த பூவுலகத்தை விட மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்;.
    - ❖ நாம் பரலோகத்தை வாஞ்சிக்கிறோமா?